# கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
இல. 18/9, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**සමුපකාර සේවක කොමිෂන් සභාව**
**උතුරු පළාත් සභාව**
නො. 18/9, වෛමන් පාර, නල්ලූර්, යාපනය.

**CO-OPERATIVE EMPLOYEES COMMISSION**
**NORTHERN PROVINCIAL COUNCIL**
**No. 18/9, Wyman Road, Nallur, Jaffna.**


## பிரத்தியேகமான சங்கங்களுக்கான பதவிகளின் தகைமைகள்

### சித்த மருத்துவம்

1. **பொதுமுகாமையாளர் - 101/04**

அ. கூட்டுறவு ஊழியர் ஆவது சம்பளத்திட்டத்தில் உற்பத்தி மேலாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 வருட கால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் / லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியில் சித்த ஆயுர்வேத மருத்துவ பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சித்த ஆயுர் வேத மருந்து உற்பத்தி நிறுவனம் / சித்த ஆயுர் வேத வைத்திய நிறுவனத்தில் கடமையாற்றிய 2 வருட கால அனுபவம்.

2. **உற்பத்தி மேலாளர் - 107-(1)/05**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சித்த வைத்தியருக்கான பட்டம் / லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரியில் சித்த வைத்தியர் பட்டம். அத்துடன் அதே சேவையை ஒத்த நிறுவனத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருடகால அனுபவம்.

3. **உற்பத்தி இணைப்பாளர் - 325/14**

அ. கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம் /
கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரபத்திர சித்தி / க.பொ.த.சாதரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

4. **உற்பத்தி உதவியாளர் - 326/16**

அ. கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் கனிஸ்ட தராதரபத்திர சித்தி அல்லது தரம் 08 கல்விச் சான்றிதழ்.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| செயலாளர்<br>ලේකම්<br>Secretary | : | 0212217930 | தொலைநகல்<br>ෆැක්ස්<br>Fax | : | 021-2220657 |
| பொது<br>පොදු<br>General | : | 021-2220657 | மின்னஞ்சல்<br>ඊ-තැපැල්<br>Email | : | npcec@sltnet.lk |

## யாழ் குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம்

**பொதுமுகாமையாளர் (101/06)**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் விவசாய விஞ்ஞானத்தினாலான பட்டம் / அதற்குச் சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட விவசாய நிறுவனமொன்றின் விவசாயத்துறை சார்ந்த 02 வருடங்களுக்கு குறையாத விவசாய துறையிலான தொழில் சார் அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட குண்டசாலை விவசாய கல்லூரியின் / அதற்குச் சமமான அங்கீகரிக்கப்பட்ட விவசாய பயிற்சிக் கல்லூரியின் விவசாயக் கற்கையிலான சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட விவசாய நிறுவனமொன்றின் ஆகக் குறைந்தது 02 வருடங்களுக்கு குறையாத விவசாய துறையிலான தொழில் சார் அனுபவம்.

அல்லது

இ) க.பொ.த உயர்தர விஞ்ஞானப்பிரிவில் சித்தியுடன் விவசாயம் சம்பந்தமான 01 வருடத்திற்கு குறையாத பயிற்சி சான்றிதழும் அங்கீகரிக்கப்பட்ட விவசாய நிறுவனம் ஒன்றில் விதை உற்பத்தி விவசாய வேலைகள் தொடர்பான ஒத்த பதவிகளில் 08 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**பண்ணை முகாமையாளர் (115/10)**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் விவசாய விஞ்ஞானத்தினாலான பட்டதாரி / அதற்குச் சமமான தகைமை.

அல்லது

ஆ) குண்டசாலை விவசாய கல்லூரியின் / அதற்குச் சமமான வேறேதேனும் அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கல்லூரியின் விவசாய டிப்ளோமா கற்கை நெறியிலான சான்றிதழ்.

அல்லது

இ) க.பொ.த. உயர்தரம் சித்தியுடன் விவசாயம் சம்பந்தமான மூன்று மாதங்களுக்கு குறையாத பயிற்சிச் சான்றிதழ் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட விவசாய நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 08 வருட கால விவசாய / விதை உற்பத்தித் துறையிலான தொழில் சார் அனுபவம்.

**யாழ் மாவட்டஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

**ஆய்வுகூடப் பொறுப்பாளர் -214/12**

(அ) க.பொ.த.உயர்தரஉயிரியல் விஞ்ஞானபாடத்துறையில் இரசாயனவியல் திறைமைச் சித்தி உள்ளடங்கலான மூன்றுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் ஆய்வு கூடமொன்றில் பணியாற்றிய ஒரு வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது

(ஆ) க.பொ.தஉயர்தரஉயிரியல் விஞ்ஞானபாடத்துறையில் இரசாயனவியல் உள்ளடங்கலான மூன்றுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் ஆய்வுகூடமொன்றில் பணியாற்றிய இரு வருடகாலசேவைஅனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(அ) மற்றும் (ஆ) தகைமைகளில் சேவைத் தகைமையைக் கொண்டிராதவர் 13 ஆவது சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படி நிலையில் பயிலுநராக (அ) எனில் ஒருவருடமும் மற்றும் (ஆ) எனில் இரண்டு வருடங்களும் சேவையாற்றுதல் வேண்டும். இச்சேவைக்காலம் திருப்திகரமாக அமைகையில் 214/12 சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படுவார். இச்சேவைக் காலம் பணிக்கொடைக்குரியது.

அல்லது

(இ) க.பொ.தஉயர்தரஉயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் இரசாயனவியல் உள்ளடங்கலான மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆய்வு கூடத் தொழில் நுட்பவியல் உயர்தரச் சான்றிதழ் கற்கை நெறியை (ACLT) பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

**தொழிலாளர் – பால்பொருள் உற்பத்தி 318/16**

பத்தாம் வகுப்பு வரை கல்வி கற்றிருப்பதுடன் பால் உற்பத்திகள் சம்பந்தமான துறையில் ஒரு வருடகால அனுபவமும் நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.